2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது என்று அவரே சொல்லிவிட்டார். மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், அந்தத் தொகுதியினுடைய கோரிக்கையாக உள்ளது. வாரச் சந்தை, தஞ்சை மாவட்டத்தின் சத்திரம் பகுதியைச் சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு பகுதியிலும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வருமானம் வரும்போது, அந்தந்தப் பேரூராட்சிக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் அந்த வருமானம் போக வேண்டுமென்பது விதி. இருந்தாலும்கூட, அந்த இடத்தை பேருந்து நிலையத்திற்குக் கேட்டிருக்கின்றார். பேருந்து நிலையத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கும்பட்சத்தில், வாரச் சந்தைக்கு உறுப்பினருடைய நகராட்சிப் பகுதியிலே இடத்தை தேர்வு செய்து அந்த இடத்திற்கு வாரச் சந்தையை மாற்றினால், வருமானம் உறுப்பினருடைய நகராட்சிக்கு வந்துவிடும். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு இடம் இருக்குமானால் கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்*

65—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***9897—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2019 ஜூலை 9

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூரில் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அறிவால்தான் ஒரு தேசம் முன்னேற முடியும். மாநில கல்வியறிவு பெற்றவர்களின் பட்டியலில் மாநில சராசரியான 80.33 சதவிகிதத்தைவிட குறைவாக 64.7 சதவிகிதம் பெற்று, மாநிலத்தில் கடைசி இடத்தில் எங்கள் மாவட்டம் உள்ளது என்பதனை நினைக்கின்றபோது மிகவும் வேதனையாக உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு மற்றும் காரியமங்கலம் ஆகிய ஒன்றியங்கள் மாநிலத்தில் மட்டுமல்லாமல், மாவட்டத்திலும் கடைசி இடத்தில் உள்ளன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்களாக கடந்த 8 ஆண்டுகளாக எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே கோலோச்சிய நிலையிலும் இந்த நிலை உள்ளது. உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எப்போது பதிலளித்தாலும் தமிழகம் உயர் கல்வியில் முன்னோடியாக உள்ளது என்று பதிலளிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வியிலே பின்தங்கிய தன்னுடைய சொந்த மாவட்டத்தில் உள்ள ஏரியூர் பகுதியில் இருக்கின்ற மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலும், கல்வியிலே பின்தங்கிய நிலையை உயர்த்திடும் வகையிலும், தான் சார்ந்திருக்கக்கூடிய தருமபுரி மாவட்டம் கல்வியிலே முன்னோடியாக வரக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திடும் வகையிலும், இந்த ஆண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, மாவட்டம் முழுவதும் அந்த நிலைமை அல்ல. தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய 8 ஊராட்சி*

ஒன்றியங்களில் நான் சார்ந்திருக்கக்கூடிய பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள காரியமங்கலம், பாலக்கோடு மற்றும் அவர் சார்ந்திருக்கக்கூடிய பெண்ணாகரம் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்கள் கல்வியிலே பின்தங்கிய ஒன்றியங்களாக இருக்கின்ற காரணத்தினால், பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக அந்த 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தனி கவனத்தைச் செலுத்தி, புதிதாக மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, அவர் சார்ந்திருக்கக்கூடிய பகுதியிலே சின்னம்பள்ளியில் ஒரு மாதிரிப் பள்ளி, நான் சார்ந்திருக்கக்கூடிய பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செக்கோடி பகுதியில் ஒரு மாதிரிப் பள்ளி, காரியமங்கலத்தில் ஒரு மாதிரிப் பள்ளி என்று உருவாக்கி, அதன் மூலமாக இன்றைக்கு மாநில அளவிலே கல்வியிலே உயர்கின்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கின்ற அரசுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, ஒரேயொரு புள்ளிவிவரத்தை மட்டும் நான் இந்த நேரத்திலே அவைக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு, இந்திய அளவிலே 25.8 சதவிகிதம் உயர் கல்வியிலே இருக்கின்ற சூழ்நிலையில், தமிழகமானது 48.6 சதவிகிதம் உயர் கல்வியிலே பெற்று, முதன்மை இடத்தில் இருக்கிறது என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நானும் அவரும் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தில், கடந்த 2018–2019 ஆம் கல்வியாண்டில் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் +2 முடித்துவிட்டு, உயர் கல்விக்குச் சென்ற மாணவர்களுடைய எண்ணிக்கை அரசு மேல்நிலைப் பள்ளியில் இருக்கக்கூடிய தலைமை ஆசிரியர்கள் மூலமாகக் கணக்கெடுக்கப்பட்டது. அதிலே தருமபுரி மாவட்டம், உயர் கல்விக்குச் சென்றவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் 98.41 சதவிகிதத்தைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உயர்நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலக்கட்டத்திலே புதிதாக நான்கே நான்கு பொறியியல் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. தருமபுரி மாவட்டத்தின்மீது தனி அக்கறை கொண்டு அந்த நான்கில் ஒன்றை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு வழங்கினார்கள்.

[2019 ஜூலை 9

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு அதே வழியில் தமிழகத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 3 சட்டக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. அதிலே ஒன்று தருமபுரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஏற்கெனவே ஒரேயொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இருந்த நிலையிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தபிறகு, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், மகளிருக்கென்று தனியாக ஒரு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்த பெருமையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

அதே பாணியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இன்றைக்கு புதிதாக கலை மற்றும் அறிவியல் இருபாலர் கல்லூரி ஒன்றையும் தோற்றுவித்தார்கள். மேலும், கல்வியிலே பின்தங்கிய ஏழை, எளிய மாணவர்கள் இருக்கின்ற காரணத்தினால், தருமபுரி மாவட்டத்தை முன்னேறிய மாவட்டமாகக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு, சுய நிதிக் கல்லூரியாக புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை இன்றைக்கு அரசுக் கல்லூரியாக மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) 19,500 ரூபாய் கட்டணம் கட்ட வேண்டிய மாணவச் செல்வங்களை 2 ஆயிரம் ரூபாய் பணம் கட்டி படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி தொடர்ந்து, தருமபுரி மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்காக அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை 6 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒரு பொறியியல் கல்லூரி, 3 பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள், ஒரு ஐ.டி.ஐ. ஆகியவை தருமபுரி மாவட்டத்திலே தொடங்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10—30

ஆக, அந்தப் பகுதியில் இருக்கின்ற அத்தனை மாணவர்களும் உயர் கல்வியைப் பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக

2019 ஜூலை 9]

அரசானது முனைப்போடு செயல்பட்ட காரணத்தினால்தான், இன்றைக்கு அனைவரும் உயர் கல்வியைப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்பதை இன்றைக்கு மாற்றி, அது ஒரு முன்னேறிய மாவட்டமாக வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வருடத்திற்கான பொறியியல் சேர்க்கைப் பட்டியல் வெளியிடப்பட்டபோது, அரூரைச் சேர்ந்த மாணவர் ஒருவர் இரண்டாவது இடத்தைப் பெற்று தருமபுரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கால்நடை மருத்துவப் படிப்பில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மாணவி 199.5 பெற்று, முதலிடத்தைப் பெற்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் இருந்த புள்ளிவிவரங்களை வைத்துத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால், இன்று அது ஒரு வளர்ந்த மாவட்டம்; கல்வியிலே உயர்ந்த மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் சார்ந்திருக்கின்ற ஏரியூரிலே புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்.

நம்முடைய மாவட்டத்தைப் பார்க்கின்றபொழுது, அரசு கல்லூரிகள் 4-ம், உறுப்புக் கல்லூரிகள் 2-ம், அதேபோல சுயநிதிக் கல்லூரிகள் 18-ம் ஆக மொத்தம் 24 கல்லூரிகள் இருக்கின்றன. முன்பிருந்த 3 உறுப்புக் கல்லூரிகளில் முதல் கட்டமாக அவர் சார்ந்திருக்கக்கூடிய பெண்ணாகரம் பகுதியில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி அரசு கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆக, 4 அரசுக் கல்லூரிகளையும் சேர்த்துப் பார்க்கின்றபொழுது, கடந்த ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 755 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல, உறுப்புக் கல்லூரிகளிலே 152 இடங்கள் காலியாக இருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளிலே 9,873 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபொழுது, இன்றைக்கு அவர் சார்ந்திருக்கக்கூடிய ஏரியூர் பகுதி கடைக்கோடியில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்தால், அதில் ஒப்பளிக்கப்படக்கூடிய இடங்களில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கு வர மாட்டார்கள்

என்பதைக் கருத்தில்கொண்டு, அந்த இடத்திலே புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி இன்றைய காலக்கட்டத்தில் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொன்னேன். பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, காரியமங்கலம் ஆகிய ஒன்றியங்கள்தான் மாவட்டத்தில் கல்வியிலே மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று சொன்னேன். மேலும், சின்னம்பள்ளி model பள்ளி 2006–2011–ல் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. ஏரியூர் பகுதியில் இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பயில வேண்டுமென்றால், 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரசு கல்லூரி இருக்கும் மாமரத்துப்பள்ளத்திற்குச் செல்ல வேண்டும். 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தருமபுரி அல்லது சேலம் மாவட்டத்திற்குச் சென்றுதான் உயர் கல்வி படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பாலக்கோடு தொகுதியில் கடந்த 2015–2016 ஆம் ஆண்டு காரியமங்கலத்தில் அரசு கல்லூரி கொண்டு வரப்பட்டது. கடந்த 2017–2018 ஆம் ஆண்டு காரியமங்கலத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற பாலக்கோட்டில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டு வரப்பட்டது. ஆனால், என்னுடைய தொகுதி கர்நாடகா மாநிலத்தையொட்டி, தமிழக பார்டரில் கடைசி நிலையில் இருக்கிறது. ஏமனூரிலிருந்து தருமபுரிக்குப் போக வேண்டுமென்றால், 70, 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். சேலம் போக வேண்டுமென்றால் 100 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். அங்கேயிருக்கின்ற மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே சிறப்பு சலுகைகளை அளித்து, இந்த ஆண்டே அந்தப் பகுதியில் அரசுக் கல்லூரி தொடங்கப்படுமா என்பதை தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஏரியூர் பகுதிக்கு அடுத்து இருப்பது மேட்டூர் அணை. ஏரியூர் என்பது கடைக்கோடி. ஏரியூரை அடுத்து நாகமரை மற்றும் நெருப்பூர் ஆகிய இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி, மலைப்பிரதேசங்கள் மிகுந்த பகுதி. அந்தப் பகுதியில் மாணாக்கர்கள் சேர்க்கை என்பது குறைவாகத்தான் இருக்கும். மாமரத்துப்பள்ளத்தில் இருக்கக்கூடிய உறுப்புக் கல்லூரியானது இப்போது அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்ட பிறகு தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாணவர்கள் எந்தப் பாடப் பிரிவில் சேர வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அத்தனைப் பாடப் பிரிவுகளும் இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் இருக்கின்றன. மாமரத்துப்பள்ளத்தில் உள்ள கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றிய பிறகு, அதில் எந்தெந்தப் பாடப் பிரிவுகள் தேவையோ அவற்றில் இந்த ஆண்டு ஒரு சில பாடப் பிரிவுகளும், அடுத்த ஆண்டில் சில பாடப் பிரிவுகளும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணாக்கர்கள் அனைவரும் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு எந்த விதத்திலும் மாணாக்கர்களைக் கைவிடாமல் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதி மாணவர்களிடமிருந்து உயர் கல்வியில் சேர்வதற்கு வரப்பெற்ற விண்ணப்பங்கள் அதாவது, தருமபுரி கல்லூரி, பாலக்கோடு கல்லூரி, பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாமரத்துப்பள்ளம் கல்லூரி ஆகியவற்றுக்கு வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களையெல்லாம் ஆய்வு செய்து, அதிலே மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதலாக சேரக்கூடிய வாய்ப்பு இருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஏரியூர் பகுதியிலே இருக்கின்ற மாணாக்கர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்து, அந்த இடத்தில் அவசியம் ஒரு கல்லூரி தேவையென்றால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர் கல்வி பெறக்கூடியவர்கள் எந்தக்

கடைக்கோடியில் இருந்தாலும், அவர்களும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற சூழ்நிலையை எப்படி உருவாக்கித் தந்தார்களோ, அதே வழியில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, எதிர் வரக்கூடிய காலக்கட்டங்களில், அது பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது கல்வியில் பின்தங்கிய பகுதியாக தருமபுரி மாவட்டம் இருக்கின்றது என்றும், தொடர்ந்து 8 ஆண்டுகளாக தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களே உயர் கல்வித் துறை அமைச்சர்களாக இருக்கின்றார்கள் என்றும் பேசினார்கள். கல்வியில் தருமபுரி மாவட்டம் 11—வது இடத்திலிருந்து 5—வது இடத்திற்கு முன்னேறி இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த அளவுக்கு வேகமாக சிறப்பான முறையில் பணியாற்றி வருகின்றது. அந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகளுடைய பெற்றோர்கள் பக்கத்தில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திற்கு தங்கள் பணிகளை ஆற்றுவதற்குச் சென்றுவிடுகின்றார்கள். குழந்தைகளைக் கவனிப்பதற்கு முதியோர்கள் மட்டும்தான் அங்கே இருக்கின்றார்கள். ஆகவே அந்தக் குழந்தைகளைச் சரியான முறையில் பள்ளிக்கு வரவழைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பல்வேறு பணிகளை ஆற்றி, சிறந்த முறையில் அந்த மாவட்டம் உயர்வதற்காக இன்றைக்கு அயராது உழைத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில் பின்தங்கி இருக்கின்றது என்கிற பேச்சுக்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இடம் இல்லை என்பதை இங்கே நான் தெளிவுபட தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய நாகப்பட்டினம் மாவட்டம், பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், பட்டியலில் 24 இடங்களுக்குப் பின்னால் இருக்கின்றது என்பதை அறிந்து, மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளினுடைய தலைமையாசிரியர்கள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கூட்டச்சொல்லி, அங்கே கலந்து பேசி ஆய்வு செய்தபோது தெரியவந்த உண்மை என்னவென்று சொன்னால், 24 இடங்களுக்குப் பின்னால் இருக்கின்ற நாகப்பட்டினம் மாவட்டத்தை முதல் இடத்தைப் பிடித்துள்ள விருதுநகர் மாவட்டத்தோடு ஒப்பிடுகின்றபோது, அது 1.8 சதவிகித மதிப்பெண் வித்தியாசத்தில்தான் 24—வது இடத்திற்குச் சென்றுள்ளது. ஆக, 2 சதவிகித வெற்றி வாய்ப்பில்தான் இந்தப் பட்டியல் 1—லிருந்து 28 வரை இருக்கின்றதே தவிர, கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்ற நிலை எந்த மாவட்டத்திலும் இல்லை என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

66—

புதிய தொழில்நுட்பப் பூங்கா

***3310—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில் புதிய தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?